
ஓம்

# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ தை 1982 ★ இதழ் - 73

## புத்தாண்டுக்கு ஒரு சங்கல்ப்பம்



விழாவில் மில்க்வைற் தொழிலதிபர் வரவேற்பும் தலைமையும் கலந்த உரையாற்றுகிறார்.

பூமி ஒவ்வொரு முறையும் சூரியனைச் சுற்றிவரும்போது ஓராண்டு பிறக்கிறது, ஆகிறது, மறைகிறது. நாமும் ஒவ்வொரு வயதை அடைந்து வாழ்ந்து முதிர்ச்சியும் அநுபவமும் பெறுகிறோம். வாழ்வில் ஒரு பகுதி நித்திரையிலும் இளமையிலும் நோயிலும் போகிறது என்றெல்லாம் மட்டிடு

வார்கள். வசதியுள்ளபோது நல்ல காரியங்களைச் செய்வதோடு, சமூகத்திற்கும், நாட்டுக்கும் நம்மாலான வரையில் உயிர்த்துடிப்புள்ள பணியைச் செய்தல் முன்றை. செய்ய முடியாவிட்டால் செய்கிறவருக்குத் தடை செய்யாமலிருந்தாலே போதும்.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)




வீட்டுக்கு ஒரு பசு வளர்க்குமாறு நெறிப்படுத்திய சித்திரம்.

★ ஆத்மஞானம் இருந்தால் பந்தபாசம் எம்மில் ஒட்டா ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

### தொழற்பாலதே என்னுந் திருக்குறுந்தொகை

[சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுள். அவர் ஒருவரையே நாம் தொழற்பாலது.]

திருச்சிற்றம்பலம்

அண்டத் தானை அமரர் தொழப்படும்
பண்டத் தானைப் பவித்திர மார்திரு
முண்டத் தானைமுற் ருத இளம்பிறைத்
துண்டத் தானைக்கண் டீர்தொழற் பாலதே.

திருச்சிற்றம்பலம்

அண்டம் எங்கும் எழுந்தருளியுள்ளவரும், தேவர்களாற் தொழப்படும் உறுதிப் பொருளும், தூய்மை பொருந்திய அழகிய திருநீற்றைத் தரித்த நெற்றியை உடையவரும், இளம் பிறையைச் சூடியருளியவருமான சிவபெருமானே, தொழத்தக்கவர் என்பதைக் காண்பீராக.

மனிதர்காள் இங்கே வாருங்கள். உங்களுக்கு உறுதிப் பொருளை உள்ளத் தூய்மையோடு உண்மையாக உங்கள் நலன் கருதி உரைக்கின்றேன் என்று வழிகாட்டிய திருநாவுக்கரசுநாயனுர், இயமன், தூதுவரைக் கூவி நீங்கள் சிவனடியார்கள் பக்கம் போகாதீர் என எச்சரிக்கை செய்து, பாதுகாப்பளித்தபின், மக்களைப் பார்த்துச் சிவபெருமான் ஒருவரே கடவுள், நீங்கள் அவர் ஒருவரையே தொழுது கொள்ள வேண்டும் என்று நல்லுபதேசம் அருளுகின்ருர்.

சிவபெருமான் முத்துப்போன்றவர், கற்பக வித்துப் போன்றவர், திருவிளக்கின் ஒளிபோன்றவர், ஒளி வீசும் பவளத்திரள் போன்றவர், அமைதியான பண் போன்றவர், அடியார்களின் எண்ணத்தில் இருப்பவர், நாம் செய்வனவற்றை எல்லாம் அறிபவர், நிலாவையொத்த திருநீற்றுப் பூச்சினர், இளமைப் பருவம் நீங்காதவர், கொன்றை மாலையினர், எங்குந்திரிந்து பலியேற்பவர், சுடுகாட்டில் நடனமாடுபவர், ஞான சூரியனுகவுள்ளவர், பல்வேறு சமயங்களாற் கருதப்பட்டவர், பிறரறியாத சுருதியான், முதல்வனுயுள்ளவர், நீதியானவர், நியம நெறிகளை ஓதியவர், ஒப்பற்ற சோதியானவர், உலகமாகியுள்ளவர், நல்லவர் வல்லவர் தொழும் கோலத்தவர், குணக்குன்ருயுள்ளவர், எல்லாவற்றுக்கும் மூலமானவர், மூவிலைச் சூலத்தையுடையவர், முதலிற்ருேன்றிய அட்ட மூர்த்தியானவர், (மண், நீர், தீ, வளி, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.) பஞ்ச கவ்வியத்தால் அபிஷேகம் பெறுபவர் நம்மேல் வினைகளை எரிப்பதற்குத் திருக்கண் நோக்கியருளுபவர், தவத்தினிடையே மாற்றங்கள் தந்து நம்மைச் சோதித்தருளுபவர், வெள்ளைக் கோவணம் அணிந்தவர், சிவந்த சடையில் கங்கையை வைத்தவர், தேவர்களுக்கு உயிர் வழங்கியவர், மெய்ஞ்ஞானத்தில் அடியேனை விட்டு மெய்ப்பொருளைக் காட்டியருளியவர், உமாதேவியாரிடத்தில் அன்பு பொருந்தியவர், முப்புரத்தவரை அழித்து அருள் செய்தவர் இராவணனின் நீண்ட முடியை முறியச் செய்தருளியவர். பிரமதேவரின் கபாலத்தைத் திருக்கரத்தில் ஏந்தியருளியவர். பாம்பை அரைக்கச்சாக அணிந்தருளியவர். இப்படிக்கொத்த இறைவனே நமக்குக் கதி. அவரையே தொழுது உய்தி பெறுவீராக.




## இல்வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இல்வாழ்க்கையானது மனைவி, மக்கள், சுற்றம் முதவியவர்களிடம் அன்பும் பிறர்க்கு உதவும் அறச் செயலும் உடையதானல், அவ்வாழ்க்கை உயர்ந்த தன்மையும் சிறந்த பயனும் உள்ளதாகும்.

**Domestic Life**

Life in the family will have its glory and its fruition, if there be love and righteousness in the house.

## 1982 தை மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | — | விநாயக சஷ்டி விரதம் |
| | | — | திருவெம்பாவை தொடர் |
| 6 | புதன் | — | சுவர்க்கவாயில் ஏகாதசி |
| | | — | கார்த்திகை விரதம் |
| 7 | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| 8 | வெள்ளி | — | நடேசர் அபிடேகம் |
| 9 | சனி | — | விடியல் ஆருத்ரா தரிசனம் |
| | | | பூரணை விரதம் |
| 12 | செவ்வாய் | — | ஆயிலிய பூசை |
| 14 | வியாழன் | — | தைப் பொங்கல் விழா |
| 15 | வெள்ளி | — | பட்டிப் பொங்கல் |
| 20 | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 22 | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 24 | ஞாயிறு | — | அமாவாசை விரதம் |

★ புண்ணியத்தின் பெருமையை விளக்கவே பாவம் நிலவுகிறது ★




## அகத்தியிலையின் மகத்துவம்

அகத்தி ஆயிரம் காய்த்தாலும் புறத்தி என்னும் பழமொழியின் கருத்து அதன் காய்தான் உதவாதது என்பதேயாம். ஆனால் அதன் இலையும் பூவும் மிகுந்த பயன் உள்ளனவாகும். அவை புறத்தியாகா. ஆனால் நோயாளிகள் வேறு மருந்துண்ணும் போது அகத்தியிலையை உண்ணல் தவிர்க்கப்பட்டுள்ளது. அகத்தியிலை சிறந்த கீரை. சிங்களவர் இதைக் கத்ருமுருங்கா எனச் செல்லமாகக் கருதியுண்பர். அது அவர்களின் கீர்த்தியுள்ள கீரை.

நோய் நீக்கும் கீரைகள் என்னும் நூலெழுதிய வைத்திய சித்தர் இலட்சுமணன், உயிர்ச்சத்து A வகையுள்ள கீரை வகையில் அகத்தியிலையை முதலிற் குறிப்பிடுவர். கல்சியம் என்னும் உப்பு கனியும் இலைகளில் அகத்தியிலையும் ஒன்று. அகத்தியிலை வெட்டைச் சூடு உள்ளவர்களுக்கு மிகவும் நல்லது. ஓரளவு வாய்வுத்தன்மையுள்ள போதிலும் இது பித்தத்தைத் தணிக்கும். நீர்ச்சளியைப் போக்கும். மகோதர வீக்கம், நீரடைப்பு முதலிய நோய்களைக் குணப்படுத்தும். கண் எரிச்சலுக்குக் கைகண்ட மருந்து.

அகத்தியிலையில் உயிர்ச்சத்து A இருப்பதோடு, போதியளவு புரதம், இரும்புச்சத்து, சுண்ணும்புச்சத்து முதலியன உண்டு. பைத்தியப் போக்குள்ளவர்களுக்கு அரிசி கழுவிய நீரில் அகத்தியிலையை அவித்து உப்பும் சீரகமும் பொடிசெய்து கலந்து பருகக்கொடுத்தால் நோய் குணமாகும். அகத்தியிலையின் மருத்துவப் பயன் மூலச்சூடு, குடற்புண் முதலிய இரத்தக்கொதிப்பு நோய்களுக்கும் மருந்தாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக விரதங்கள் அநுட்டிப்போர் ஒன்றும் உண்ணமல் உபவாசமாயிருந்து ஆயாசம் உண்டாகியுள்ளபோது ஓரளவு அகத்தியிலைக் கறி உண்டாலே எல்லா ஆயாசமும் நீங்கிவிடும். எனவே பாரணஞ் செய்வோர் அகத்தியிலையைப் பக்குவஞ் செய்வது வழக்கம்.

அகத்தி ஆண்டு முழுவதும் எங்கும் பயன் தரும். சிலர் வெற்றிலைக் கொடிக்குக் கொழுகொம்பாக அகத்தியை நாட்டுவர். அகத்தியிலை இளம் இலைகளையே பயன்படுத்தவேண்டும். சுண்ணும்புச் சத்திருப்பதால் எலும்பு, பல் முதலியவற்றுக்கு அகத்தியிலை உணவு ஏற்றது. வயோதிப காலத்தில் எலும்பு வலிமையாக நிலவுவதற்கு அகத்தியிலை பெரிதும் உதவும். மலச்சிக்கலை நீக்குவதற்கும் அகத்தியிலை மகத்தானது.

தை மாசி மாதங்களில் அகத்தி நன்ருகப் பூக்கும். அகத்திப் பூக்களைக் கீரைகளோடு சேர்த்துச் சமைப்பர். அகத்திப் பூவில் சதைப்பற்று அதிகமுண்டு. அகத்திப் பூவோடு பாசிப் பயறும் சேர்த்து உண்பதால் இருதய நோய் நீங்கும். அகத்திப் பூவும் இளம் இலையும் கலந்து சாறு பிழிந்து பருகிவந்தால் குடற்புண் ஆறும். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்ட பதார்த்தகுண சிந்தாமணி அகத்தியிலையை வெகுவாகப் போற்றுகிறது.

''மருந்திடுதல் போகுங்காண் வன்கிரந்தி வாய்வாந்
திருந்த வசனஞ் செரிக்கும் — வருந்தச்
சுகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்
அகத்தியிலை தின்னு மவர்க்கு''

இத்தகைய அற்புத மூலிகையைப் பிரதேசமெங்கும் பரவலாகப் பயிரிட்டுப் பயன்காணச் செய்வதற்கு மில்க்வைற் தொழிலதிபர் பொலித்தீன் பைகளில் அகத்திக் கன்றுகளை ஆயிரக்கணக்கில் வழங்குகிருர். வாங்கிப் பயிரிட்டுப் பயன்பெறுவோமாக.

## பருத்திக்கு அடுத்த சணப்பு

பருத்திப்பஞ்சுக்கு அடுத்த நார் சணப்பு. சணப்பைச் சணல் என்றும் கூறுவர். சஞ்சலம் தீர்க்கும் சணல் என்று பலமுறை நாம் செய்தியில் அதைப்பற்றி எழுதிேனும். சணல் பசுந்தாள் உரமாகவும் பயன்படுகிறது. ஆறடி முதல் எட்டடி உயரம் வளரக்கூடிய பயிரைப் புழுதி விதைப்பாகவும், சேற்று விதைப்பாகவும் உண்டாக்கலாம். நாருக்காகப் பயிர்செய்பவர் கயிறு திரிக்கவும், முரட்டுத் துணி செய்யவும், கோணிப்பை செய்யவும், வலைக்கயிறு திரிக்கவும் பயன்படுத்தலாம். சணற்கயிறு ஈரந்தாங்கும் வலிமையுள்ளது. சணலைப் பயன்படுத்தி முரட்டுக்காகிதம் செய்யலாம் என்பர்.


ஆந்திரப் பிரதேசத்தில் பசுந்தாள் பசளையாகவும், நார்ப்பயிராகவும், தீவனப் பயிராகவும் பயன்படும் சணலுக்கு நல்ல மதிப்பு உள்ளது. நாமும் நம் மாவட்டமெங்கும் நம் வயல்களில், தோட்டங்களில் சணலைப் பயிரிட்டுப் பயன்பெறலாம்.

நெல் அறுவடை செய்வதற்கு மூன்று நான்கு நாட்களுக்குமுன் கைவிதைப்பாக விதைகளை வீசி விதைக்கலாம். நிலம் தரிசாயிருக்கும்போது ஈரம் வீணுகக் காயும்போது சணல் அதனைப் பயன்செய்கிறது. சணல் குறுகியகாலப் பயிராதலால் எமக்கு வந்தது மிச்சமாகும். ஒரு ஏக்கரில் 3000 ருத்தல் உலர்ந்த தீவனப் பயிராக அது உதவவும் கூடும். வைக்கோலிலும் பார்க்க உயர்ந்த புரதச்சத்துள்ள சணல் பலவிதமாகப் பயன்தரும். விதைப்பதும் வெட்டுவதும் தவிர வேறு எவ்விதமான வேலையும் வேண்டுவதில்லை. விதைப்போமா?

## மூங்கில் வளர்ச்சி

நெல், கரும்பு. மூங்கில் முதலியன தமிழ் நாட்டில் மிகப்பழைய காலத்திலேயே அறிமுகமானவை. பட்ட மூங்கிலில் வண்டுகள் துளையிட அவற்றினூடே காற்றுப் புகும்போது வேணுகானம் இயற்கையாகவே உண்டானது என்பர். மூங்கிலின் வளர்ச்சியும் மிகவும் வேகமானது. அது சிலசமயம் நூறு அடியுயரத்துக்கும் மேலாக வளர்வதுண்டென்பர்.

★ ஆகமங்களின் அடிப்படையில் சைவசமயம் வளர்ந்தது ★



## நெல்லியின் பெறுமதி

ஒரு நாளில் ஒரு அப்பிள் பழம் உண்பவர் வைத்திய ரிடம் போகாமல் வாழ்கின்றார் என்றொரு பழமொழி ஆங்கிலத்தில் வழங்குவதுண்டு. அண்மைக்கால விஞ்ஞானி கள் கண்ட முடிவின் வண்ணம் அப்பிள் பழத்திலும் பார்க்க நெல்லிக்காய் அதிக சத்துள்ளது என்பதாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே ஔவை யார் நெல்லிக்காயின் அருமையைப் பாடி அதனை நெல் லியந் தீங்கனி என்றார். அது அவருக்கு மரண காலத்தைப் பின்போட்டது என்பர். நீண்ட காலம் வாழ்பவருக்கு ஔவையார் என்பது பொதுப் பெயராகிவிட்டது.

நெல்லிக்கனியில் எல்லா உணவுச் சத்துக்களும் உள் ளன. அவற்றோடு C இனத்து உயிர்ச்சத்தும் அதன் அல் கோபிக் அமிலமும் நெல்லிக்காயில் நிறையவுண்டு. நூறு கிறும் நெல்லிக்காயில் 600 மில்லி கிறும் C உயிர்ச்சத்து உண்டென்ப. இதே அளவில் 100 கிறும் அப்பிளில் இரண்டு மில்லிக் கிறும் C உயிர்ச்சத்து உள்ளது என்பர். மாம்பழம், பப்பாப்பழம் எல்லாவற்றையும்விட நெல்லி உயர்ந்த உணவு என்பர். அன்றி அதிலுள்ள ரானிக் என் னும் ஒரு பொருள் நெல்லிக் கனியையும் அதன் சத்தை யும் கெடாமல் பாதுகாக்கின்றது.

நெல்லிக்கனி இளைஞர்களுக்கும் பாலூட்டும் தாய் மாருக்கும் மிகவும் நல்லதாகும் என்று சித்தவைத்தியரும் ஆயுர்வேத வைத்தியரும் கூறியுள்ளனர். இந்து சமயத்த வர் கண்ட புனித மரங்களுள் நெல்லியும் ஒன்று. அது புனிதமானது. எனவே இறைவனுறையுமிடமாகக் கருதி அதன் சூழலைத் தூய்மையாகப் பேணுவர். அது செய்ய வியலாதவர் நெல்லி வீட்டுக்கு ஆகாது என்று கூறுவர்.

நெல்லிக்கனி பற்களைச் சுத்தம் செய்யும், இரத்தத் தைச் சுத்திகரிக்கும், தோல்நோய்கள் வராமல் தடுக்கும், மலபந்தத்தை நீக்கும். இருமல், தடிமன், வாந்தி, மயக் கம், சமியாக்குணம் முதலியவற்றை நீக்கும். மஞ்சள் காமாலை, இரத்தசோகை முதலியவற்றைக் குணப்படுத் தும். உடம்பின் சூட்டைத் தணிக்கும். தாகத்தையும் பித்தத்தையும் போக்கும். குடல்களின் அழுக்கை நீக்கும். இருதயம் நுரையீரல் ஆகிய உள்ளுறுப்புக்களுக்கு வலிமை தரும். கண்பார்வையை அதிகரிக்கச் செய்யும்.

### மாவட்ட அபிவிருத்தியில் நெல்லி

வரட்சியைத் தாங்கக் கூடிய நெல்லி வடமாகாணத்து யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு முதலிய பிரதேசங்களிலும், கிழ்மாகாணத்தில், திருக்கோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை முதலிய மாவட்டங்களி லும் நல்ல பயன் தரும். ஒரு ஏக்கர் நிலத்தில் ஐம்பது நெல்லி மரங்களை உண்டாக்கலாம். நெல்லி மரம் எட்டு, ஒன்பது ஆண்டுகளில் பயன் தரும். அது வருடந்தோறும் இருநூறு றுத்தல் கனிதரும்.

### உற்பத்தித்துறையில்

நெல்லிக்காயை வற்றலாக்கியும், ஊறுகாய் செய் தும், சாறு பிழிந்தும், சர்பத் செய்தும், லேகியம் செய்தும் இன்னும் பல வழிகளிலும் பலவிதமான உற் பத்திகளைப் பெருக்கலாம். இவை எல்லோரும் நன்கறிந்த செய்திகள். நாங்கள் நினைவு செய்கிறோம். நெல்லிக்கன்று களை இலவசமாக விநியோகிக்கிறோம். எங்கள் பிரதேசத் தில் நெல்லி வளம் பெருகவேண்டும்.

### நெல்லியைப் பயன் செய்து நெடுநாள் வாழ்வோம்

நெல்லிக்காயைப் பச்சையாகவும் நீரில் ஊறவிட்டும் காரம் சேர்த்தும், உப்பிட்டும் உண்பர். நெல்லி வற்றலை நெல்லி முள்ளி என்றும் வழங்குவர். சிலர் வடகம் தயாரிப்பதும் உண்டு. நெல்லி வற்றல் பழுதாகாமல் நீண்ட காலம் பயன் தரும். சிலர் நெல்லிக்காயைக் கொட்டை நீக்கித் தேனில் ஊறவிட்டு உண்பர். இதனால் தலைவலி, கண்நோ முதலியன குணமாகும் என்பர். நெல்லிக்காய்ச் சாற்றில் தேனும் சிறிது மஞ்சற்பொடியும் கலந்து காலையில் உண்டு வந்தால் நீரிழிவு குணமாகும் என்பர். நெல்லிக்காயைச் சக்கரையிட்டு இறுக்கமாக மூடிவைத்துச் சில நாட்களின் பின் உண்டால் நல்ல பயன் தரும் என்றும் மருத்துவர் கருதுவர்.

## வேடிக்கைப் பழமொழிகள்

(முற்றொடர்)

கெட்ட கேட்டுக்குக் கொட்டொன்று முழக்கொன்று.
கையில்லாமல் சுரணம் போடலாமா?
கொக்குக்கு உண்டா வீரசைவம்?
கொசுவுக்குப் பயந்து குடிபெயர்ந்து போவதா?
கொட்டிக் கிழங்கு விற்கிறவள் கோயிலில் ஆடுவாளா?
கோபத்தில் அறுத்த மூக்கு மகிழ்ச்சியில் வருமா?
கோழி கறுப்பானால் முட்டையும் கறுப்பாகுமா?
சண்டிக் குதிரைக்கு நொண்டிச் சாரதி.
சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன்.
சம்பளம் குறைந்தாலும் சலுகை இருக்கவேண்டும்.
சாண் பண்டாரத்திற்கு முழம் தாடி.
சிங்கம் பசித்தால் தேரையைப் பிடிக்குமா?
சுற்றத்துணியும் இல்லை, நக்கத் தவிடும் இல்லை.
செத்த பாம்பை ஆட்டுவாள் வித்தைக்காரப் பெண்.
செருப்பால் அடித்தாலும் திருட்டுக் கை நிற்காது.
சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
சோம்பேறிக்கு வாழைப் பழம் தோலோடு.

★ சைவசமயத்தவரை ஆகமாந்திகள் என வழங்குவர் ★

# நடமாடும் கலைக்களஞ்சியம்

சென்ற நூற்றாண்டில் ஈழவள நாட்டிலே தோன்றிக் கல்வி கேள்வி, அறிவாற்றல் நிரம்பிய பெரியார்கள் பலர் காலத்துக்குக் காலம் தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழ்ப்பணியும் சைவப்பணியும் புரிந்து ஆயிரக்கணக் கானோரின் அறிவுக் கண்ணைத் திறந்துவைத்த பெருமை பெரிது. குப்பிழான் செந்திநாதையர் அவர்கள் காசி வரையுஞ் சென்று வேதசிவாகமங்களில் நீண்டகாலம் ஆராய்ந்து காசிவாசி செந்திநாதையராகித் திருப்பரங் குன்றத்தமர்ந்து பெரும் பணிபுரிந்துள்ளார்.

இந்த நூற்றாண்டில் எம் நாட்டவர்கள் பலர் தென் கிழக்கு நாடுகளான சிங்கப்பூர், மலேசியா சென்று அங்கே அரசவுத்தியோகம் பார்த்துப் பொருளீட்டிப் பெருமையுற் றிருந்தார்கள். அவர்களுள் ஒருசிலர் கல்விப் பணிபுரிந்து புகழீட்டியுள்ளார்கள்.

முன்னர் சிவநடனத்தைப் பற்றிக் கலித்தொகை யில் கடவுள் வாழ்த்துப் பாடியவர், சித்தாந்த சாத்திரங் களுள் உண்மை விளக்கம் பாடியவர், சிதம்பரமும் மணிக் கோவை பாடியவர், புலியூர்ப்புராணம் படியவர், திரு வாதவூரடிகள் புராணம் பாடியவர் என்றின்னோர் பலருக் குப் பின் வந்த கலாயோகி ஆனந்த கென்ரிஸ் குமார சுவாமி என்பார் ஆங்கில மொழியறிந்தோர்க்கெல்லாம் பெருவிருந்தாகச் சிவநடனம் என்னும் பொருளில் பெரு நூல் ஒன்றை எழுதியதோடு அதனோடொத்த கலை நூல் கள் பலவற்றையும் ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளை யும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அன்றி அமெரிக்காவில் 1917 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டுவரை ஆச்சிரம மமைத்து வாழ்ந்து கீழைத்தேசக் கலை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றை மேற்குத் தேசத்தவருக்கு விளக்கியுள்ளார்.

அந்த அற்புத மனிதனை ஆனந்தக்குமாரசுவாமி அவர்களிடம் அதிகபற்றுக் கொண்டு அவர் தம் வரலாற்றை யும் பணியையும் ஆங்கிலத்தில் எழுதியவர் மலேசியாவில் வாழ்ந்து வரும் அன்பர் துரைராஜசிங்கம் அவர்களாவர். ஆங்கிலஇலக்கியம் வல்லார் அவரை பொஸ்வல்என ஆர்வத் தோடு வழங்குவதுண்டு. அவரை எல்லோரும் அபிமானத் தோடு நடமாடும் கலைக்களஞ்சியம் என்பர். அரசறியப் பெரும் புகழ் பெற்ற அவர் தம் வாழ்நாளில் பவள விழாக் கண்டும் இன்றும் இளைஞராக இருந்து பணி செய்து வரு வது எமக்கெல்லாம் பெருமையளிப்பதாகும்.

துரைராஜசிங்கம் அவர்கள் நாற்பத்தைந்து ஆண்டு கள் ஆசிரியராகப் பணி புரிந்ததோடு ஓய்வு நேரங்களில் முப்பத்தாறு நூல்களை எழுதியுள்ளார். இன்னும் அண்மை யில் எழுதியவை, இன்று எழுதிக்கொண்டிருப்பவையும் உண்டு.

மலேசியா சிங்கப்பூர் நாடுகளின் இடப்பெயர் அகராதி யும் வரலாறும் என அவர் எழுதியமை சீனர், மலாயர், இந்தியர், இலங்கையர் மத்தியில் பெருமதிப்பைக் கொடுத் தது. இதனை அவர் 1927 ஆம் ஆண்டிலேயே போல்ட் துறை முதல் குவான்ரன் வரையும் எனப் பெயரிட்டு வெளியிட்டார். இருபத்திரண்டு ஆண்டகை இளைஞ யிருந்த காலத்திலேயே அவர் எழுத்தாற்றலை ஆங்கிலே யர் பெரிதும் மெச்சினர்.

அக்காலத்தில் வித்தியாதரிசியாயிருந்த ஜெருல்ட் ஹோக்கின்ஸ் என்பார் துரைராஜசிங்கம் அவர்களை இராசாங்க ஆசிய சங்கத்து அங்கத்தவர் ஒருவராக்கிக் கௌரவித்தார். எழுத்துத்துறையில் ஒளிவீசி வந்த துரை ராஜசிங்கம் அவர்களைக் கலாயோகி ஆனந்தக்குமார சுவாமி அவர்களின் கலைத்துறையில் ஆற்றுப் படுத்திய வர் யப்பானிய அதிகாரி ஒருவராவர்.

இரண்டாம் மகாயுத்த காலத்தில் ஆனந்தக்குமார சுவாமி அவர்களைப்பற்றி அறிவதில் அயரா நாட்டமும் ஆர்வமும் கொண்ட துரைராஜசிங்கம் எழுநூறு பக்கங் களுக்கும் அதிகமான பெருநூலை எழுதி ஆனந்தக்குமார சுவாமி அவர்களின் வரலாற்றை உலகறியத்தந்தார். இதைவிட மேலும் பத்து நூல்கள் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் கலைவளத்தைப் பற்றி எழுதியுள்ளார். இவற்றையெல்லாம் எழுதுவதற்கு வேண்டிய தகவல்களை அவர் உலகமெங்கும் பரவி வாழ்கின்ற அறிவாளிகளிடம் தொடர்பு பூண்டு ஆனந்தக்குமாரசுவாமி அவர்களைப் பற்றிய முழுத்தகவல்களையும் பெற்றுள்ளார்.

துரைராஜசிங்கம் அவர்களின் அச்சேறாத நூல்களுள், குமாரசுவாமி என்பவர் யாவர்? என்பதும் ஒன்றாகும். கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் நூல்கள் பலவற்றையும், தாம் கலாயோகியைப் பற்றி எழுதிய நூல்களையும் யாழ்ப்பாணத்துப் பொதுசன நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்த துரைராஜசிங்கம் அவர்கள், அவை யாவும் கருகியமை கேட்டு மனமுருகினார். ''அப்படியாக எனது ஆனந்தக்குமாரசுவாமியின் அரிய நூல்கள் சாம்ப ராயின. இனி என்ன செய்வோம்'' என மனம் வருந்தினார்.

இன்று மூவர் திருமுறைகளாகிய தேவாரத் திருப் பதிகங்களில் சங்கார காரணராய சிவபெருமான் சுடலை யாடியென்னுந் தொடர்களில் ஆராய்ச்சி செய்து ஆங்கிலே யருக்கு உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான் என விளக் குவதில் பெருமுயற்சி எடுக்கிறார் போலத் தெரிகிறது. ஆங்கிலம் பேசும் உலகிற்குச் சனாதன தருமத்தை விளக்கி வரும் துரைராஜசிங்கம் அவர்களின் பெருமுயற்சி வெல்வதாக. அவர் வாழ்க. அவர் பணி ஓங்குக.

## கந்தரோடையில் ஒருநாள்

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் மில்க்வைற் தொழிலதிபர் மலைவேம்பு, நெல்லி முதலிய மரங்களை நாட்டியதோடு, தமக்குப் பெருந்தொகையான பனம்விதைகள் உபகரித்த மாணாக்கர் மாணாக்கியருக்கும் பாடசாலைக்கும் பலநூல்களை அன்பளிப்புச் செய்து சமூகத் தொண்டு பற்றிச் சிறப்புரை வழங்கினார்.

## நண்டினங்கள்

எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து ஊர்ந்து வரும் நண்டினத்தில் 4,500 வகைகள் உண்டு. அவை பெரும்பாலும் அழுக்கையும் பூச்சி புழுக்களையும் தின்று பெருகுவன. நாங்கள் அவற்றை அருவருப்பின்றி அருந்திப் பெருக்கின்றோம்.

★ எல்லா உயிரினங்களுக்கும் தனித்தனி இயல்புகள் உண்டு ★



## பஞ்சதந்திரம்

ஆடு பின்வாங்குவது பலமாக முட்டுவதற்கே. சிங்கம் பதுங்குவது மேலும் கோபத்தோடு பாய்வதற்கே. புத்தி சாலிகள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு நெஞ்சில் வஞ்சகத்தை இரகசியத்தில் வளர்த்துவருவார்கள். பலவீனன் அகங்காரங்கொண்டு பலசாலியோடு சண்டை செய்தால், அவன் எதிரியின் விருப்பத்தைத்தான் நிறைவேற்றுவான். தனது உயிரையும் குலத்தையும் தான் நாசமாக்கிக் கொள்வான். இளைத்தவர்களேயானுலும் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தால், அவர்களைப் பலசாலிகளாலும் துன்புறுத்த முடியாது. ஒரே இடத்தில் கூட்டமாக வளரும் புதரைப் புயற்காற்றுப் பெயர்ப்பதில்லை.

மரம் பெரிதாக இருக்கலாம், நன்கு வேரூன்றியும் இருக்கலாம். இருந்தாலும் அது தனிமரமாக நின்ருல், அதைப் பலமான புயற்காற்று வேரோடு பெயர்த்து எறிகிறது.

ஆனுல் மரங்கள் நன்கு வேரூன்றிக் கூட்டம் கூட்டமாக இருந்தால் அவற்றைப் புயற்காற்றுச் சுலபமாகப் பெயர்ப்பதில்லை.

மூங்கில் பலமில்லாததுதான். என்ருலும் அது கூட்டமாக இருந்தால் அதை வீழ்த்துவது கஷ்டம். பலமில்லாத அரசர்கள் ஒன்ருய்ச் சேர்ந்திருந்தால் அவர்களை வெல்ல முடியாது.

பெரியவர்களோடு ஒன்று சேர்ந்தால் யாருக்குத்தான் உயர்வு இல்லை? தாமரை இலைமேல் இருக்கும் நீர்த்துளி முத்துப்போல் ஒளி பெறுகிறது.

கடவுள், பிராம்மணன், குரு ஆகியோரிடமும், தன்னிடத்திலும் ஒருவன் நேராகவே நடந்துகொள்ள வேண்டும்.

பசுக்கள் வாசனையைக் கொண்டு பார்க்கின்றன. பிராம்மணர்கள் வேதங்களைக் கொண்டு பார்க்கின்றனர். அரசர்கள் ஒற்றர்களைக் கொண்டு பார்க்கின்றனர்.

அறிவுக் குறைவான பண்டிதன், வேதம் கற்காத புரோகிதன், மக்களைக் காக்காத அரசன், வெறுப்பாகப் பேசும் மனைவி, ஊரை விரும்பும் இடையன், பணத்தில் ஆசை கொள்ளும் நாவிதன், ஓட்டைவிழுந்த கப்பலுக்குச் சமமாகக்கருதி இவர்களை விட்டு நீங்கவேண்டும்.

## தமிழில் வழங்கும் வடமொழிகள் சில

(முற்ருெடர்:-)

| | | |
|---|---|---|
| நூதனம் | — | புதுமை |
| நூபுரம் | — | காற்சிலம்பு |
| நேத்திரம் | — | கண் |
| நைமித்திகம் | — | சிறப்புவிழா |
| நையாயிகன் | — | அளவைநூலோன் |
| பகவதி | — | இறைவி |
| பகவன் | — | கடவுள் |
| பகவான் | — | பெருமான் |
| பகிஷ்காரம் | — | விலக்கு |
| பகிரங்கம் | — | வெளிப்படை |
| பக்குவம் | — | தகுதி |
| பக்தன் | — | அன்பன் |
| பங்கஜம் | — | தாமரை |
| பிசாசு | — | பேய் |
| பசிதம் | — | திருநீறு |
| பசு | — | ஆ, உயிர் |
| பசுபதி | — | உயிர்த்தலைவன் |
| பச்சாத்தாபம் | — | கழிவிரக்கம் |
| பஞ்சகௌவியம் | — | ஆவினைந்து |

## பொங்கல் வாழ்த்து

எங்கள் மனைபோல் எல்லோர் மனையிலும்
மங்களப் பொங்கல் மகிழப் பொங்குக
அன்பு பொங்குக அருளும் பொங்குக
இன்பம் பொங்குக ஈகை பொங்குக
உள்ளம் பொங்குக ஊக்கம் பொங்குக
எண்ணம் பொங்குக ஏற்றம் பொங்குக
ஐயர் விதித்த அறவழி பொங்குக
ஒழுக்கம் பொங்குக ஓதுதல் பொங்குக
ஔவை வாழ்த்திய அமைப்புகள் பொங்குக.

### பைரேமெகெயின்

ரஷ்ய வைத்திய நிபுணர்கள் அண்மையிற் கண்டுபிடித்த கலவை மருந்தாகிய பைரேமெகெயின் என்பது உடலுக்கோ உடலுறுப்புக்களுக்கோ கேடில்லாத மயக்கமருந்தாகும். நீண்டநேர சத்திர சிகிச்சைக்கு இம்மருந்து மிகவும் உபயோகமாகும் என்பர்.

### இரத்ததானத்துக்குப் பதில்

இரத்ததானத்துக்குப் பதிலாக அமெரிக்க வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்த கலவைத் திரவம் ஒன்று மிக விரைவில் வைத்திய உலகில் வரப்பிரசாதமாயமையும் என்பர். இது இரண்டு மடங்கு பிராணவாயு என்னும் ஒக்சிசனை உட்செலுத்தும் உபகாரியாகும்.

**உயிருக்குப் பல பிறவிகள் உண்டு என்பது இந்துமத நம்பிக்கை**

# நாள்முழுவதும் நடைபெற்ற விழா

## நன்மை பயந்த கருத்தரங்கு

பேராதனை உலர்வலயப் புல்வெளியபிவிருத்தித் துறையைச் சேர்ந்த பெரும் பட்டதாரி சி. சிவசுப்பிரமணியம் அவர்களும் அவர்தம் நண்பர் அநுரதபுரம் விவசாயப் பண்ணை முகாமையாளர் செ. சிவசுப்பிரமணியம் அவர்களும் விழா செவ்வனே நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்தனர். திருநெல்வேலி பெண்கள் விவசாயப் பாடசாலையாரும் மில்க்வைற் தொழிலதிபரும் விழாவுக்கான ஒழுங்குகளைச் செய்தனர். காலை மாலை நிகழ்ச்சிகளிடை நேரத்தில் சிற்றுண்டியும் தேநீரும், மதிய இடை நேரத்தில் உணவும் பரிமாறி விருந்து செய்வதற்கு விவசாயப் பாடசாலை அதிபர் முன்னின்றார். மதிய உணவின் சைவப் பகுதியினருக்கு நெல்லி ஊறுகாய் கொடுப்பதில் விநாயகம் தொழிலக மூர்த்தி அவர்களையும், மாலைச் சிற்றுண்டிக்குச் சுவையூட்ட வாழைக் கனியுதவிய அண்ணா தொழிலக அதிபர் நடராசா அவர்களையும் பாராட்டுதல் வேண்டும்.

## விழா நடந்தது

அன்று 19-12-81 சனிக்கிழமை காலை எட்டு மணியளவில் விவசாயப் பாடசாலை மண்டபம் நிறையப் பண்ணையாளர்களும், விவசாயிகளும், விவசாயத்துறை மாணுக்கர் மாணுக்கியர் இளம் பட்டதாரிகளும் வந்திருந்தனர்.

## பிரமுகர்கள் வருகை

மங்களகரமாகக் குத்துவிளக்கேற்றி விழாவிற் பங்குபெறுவதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர்-முன்னுள் செனற்சபை உறுப்பினர் சு. நடராசா அவர்களும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தே. நேசையா அவர்களும் வருகைதந்தனர். வந்தவர்களுக்கு வரவேற்புக் கூறுமுன் மில்க்வைற் தொழிலகத்தார் தயாரித்திருந்த புல்லாலான பச்சை மாலைகளை நிர்வாகிகள் அணிவித்தார்கள். மாவட்ட அபிவிருத்திச்சபைத்தலைவர் நடராசா அவர்களை அண்ணா தொழிலக உரிமையாளர் நடராசா மாலை சூட்டிவரவேற்றார். அரசாங்க அதிபருக்குத் தொழிலதிபர் கனகராசா மாலை சூட்டினர்.

மாவட்டசபைத் தலைவர் நடராசா அவர்கள், மில்க்வைற் தொழிலதிபர் அச்சிட்டு வழங்கிய வீட்டுக்கு ஒரு பசு என்னும் சிறு சுவடியை வெளியிட்டு பசு வளர்த்தலைப் பற்றி ஊக்குவித்துப் பேசினர். செய்யுந் தொழிலே தெய்வம் என்னும் சுலோகத் தாளை அரசாங்க அதிபர் வெளியிட்டுத் தொழிலின் மகத்துவத்தை விளக்கினர். யாழ் மாவட்டத்தில் பால் பண்ணையபிவிருத்திக்குத் தாம் கூடிய கவனம் செலுத்தப்போவதாயும் பால் சேகரிப்புக்கும், புல்லபிவிருத்திக்கும் நிலம் ஒதுக்கப் போவதாயும் உறுதிகூறி ஊக்குவித்தார்.

மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களையே தலைமைதாங்கி நடத்துமாறு பணித்துவிட்டுத் திருவாட்டி சீவரத்தினம் உபசரிப்பில் ஈடுபட்டிருந்தார். கலாநிதி சடோகர், பேராதனை சி. சிவசுப்பிரமணியம், கால்நடை நிபுணர்கள், மிருகவைத்தியர்கள் கலாநிதிகள் க. சுணேசன் அவர்கள், ஏ. வி. ஆர். யோசேப் அவர்கள், பண்ணையபிவிருத்திக் கூட்டுறவாளர் எஸ். இராமன் அவர்கள் முதலிய பெரியவர்கள் விரிவுரையாற்றினர்கள். கருத்தரங்கு பரபரப்பாக நடைபெற்ற போது பணையபிவிருத்தி பற்றி சு. பரநிருபசிங்கம் கருத்துப் பரிமாறினர்.

விழா முடிவில் பாற்பண்ணையபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி சம்பந்தமான படக்காட்சியும் நடைபெற்றது. விவசாயத் திணைக்களத்தார் மலைபோல் குவித்துவைத்த புல் நறுக்குகளை வந்தவர்களுக்கு வாரி வழங்கினர். யாழ்ப்பாணமெங்கும் பல இனப்புல் வளர்வதற்கு வேண்டிய நறுக்குகள் வேர்கள் விதைகள் வழங்கினர். மில்க்வைற் தொழிலதிபர் அன்று வரவழைத்த தேக்கங்கன்றுகளை வழங்கினுர்.

## மில்க்வைற் தொழிலதிபருக்கு நன்றி

கலாநிதி சடோகர் நகைச்சுவை ததும்பப் பேசியதோடு தொழிலதிபருக்குப் பெரிதும் கடமைப்பட்டதாக நன்றி கூறினர். ''நாங்கள் மலை நாட்டில் வசதியாக இருந்து கொண்டு தபால் எழுதினதே தவிர ஒன்றுஞ் செய்யவில்லை. இப்படியானதொரு கருத்தரங்கை, மண்டபம் நிறையப் பிரமுகர்களை நிரப்பிப் கோலாகலமாக நடத்துவித்த பெருமை மில்க்வைற் தொழிலகத்திற்கே உரியது'' என்றார். மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களைப்போல இன்னும் ஒருசிலர் இந்த மாவட்டத்தில் முன்வருவார்களாயின், வரண்ட பிரதேசமெங்கும் பசுமை தவழும். இவர் இன்னும் பல இடங்களில் இத்தகைய பயிற்சி நெறி விழாவை நடத்துவதற்குக் கொண்டுள்ள ஆர்வம் என்போன்றவர்களை இரும்பூதெய்தச் செய்கிறது. இங்கே குன்றுகள்போலக் குவிந்துகிடக்கும் புல் நறுக்குகள் வேர்களில் நீங்கள் எவ்வளவு தொகையை அள்ளிச் சுமந்துபோக முடியுமோ அவ்வளவுக்கு அள்ளிச் சென்று உங்கள் வளவையும் அயலிடங்களையும் பசும்புல் வளருமிடமாக விருத்தி செய்யுங்கள். ஏற்கெனவே நண்பர் கனகராசா அவர்கள் மரஞ்செடி புல் வளர்க்கும் பணியில் எமக்கெல்லாம் முன்னேடியாய் விளங்குகின்ருர். நாங்கள் அவருக்குக் கடமைப்பட்டவராயுள்ளோம். விவசாயம் விருத்தியடைந்த அளவுக்குக் கால்நடை வளர்பு விருத்தியடையவில்லை எனக்கண்ட கனகராசா வீட்டுக்கு ஒரு பசு என்னும் விழுமிய பணியை மேற்கொண்டுள்ளார். இங்கே விவசாயப் பாடசாலைப் பொறுப்பதிகாரியாக விளங்கும் திருவாட்டி சீவரத்தினம் அம்மையார் புல் ஆராய்ச்சி நிபுணர். இவர் செயல் முறையில் இங்கே நாட்டி வளர்த்த புல்லினங்களை நாம் இன்று மாலை பார்த்துப் பழகலாம். யாழ்ப்பாணத்தவரின் விருந்தோம்பும் பண்பாடு பாரம்பரியமானது, பெரியது மகிமை வாய்ந்தது என்பதை நான் நன்கறிவேன். அதை இன்று திருவாட்டி சீவரத்தினம் நடைமுறையிற் காட்டியுள்ளார். உங்கள் அரசாங்க அதிபர் இப்பிரதேசத்தின் புல் அபிவிருத்திக்கு நிலம் தருவதாகக் கூறியுள்ளார். நிலம் கிடைக்குமாயின் வரண்ட வலயப்புல் அபிவிருத்தியாளர் போதிய புல் தருவார்கள். நாங்கள் குழி முறையில் புல்லைச் சேமித்துப் பாதுகாக்கவும் போதியனவாக அமையும். ★

★ பண்பையும் சிந்தனைசக்தியையும் உருவாக்குவது அநுபவம் ★



# மாட்டுப் பொங்கல்

★★★★★★★★★★★

தமிழர் வாழ்வில் தைப்பொங்கல் விழாவையடுத்து மறுநாள் வருவது மாட்டுப் பொங்கல். வாழ்வை வளம் படுத்தும் கால்நடைகள் செய்த உதவியின் பொருட்டு நன்றிக்கடனுகக் கால்நடைகளைத் தெய்வாம்சம் உள்ளன வாகக் கருதி அவற்றை மங்கலகரமாக நீராட்டிப் பூவும் பொட்டுமிட்டுப் பூசித்துப் பொங்கிப் பலகாரவகைகள் படைத்து உணவூட்டி மகிழ்தல் விழாவின் சுருக்கம், மாடு செல்வம் என மதிப்புப் பெற்ற இந்துநாகரிகத்தில் பசு வீடுகள் தோறும் பால் சொரிவதோடு, வயலுக்கு வள மூட்டும் கோமயம் கோசலம் தருவது. வீட்டுக்கு இலட் சுமியை வரவழைப்பது தானே இலட்சுமி கடாட்சம் பெற்றுள்ளது. புனராவர்த்தன கும்பாபிடேகம், திருமங் கல்ய தாரணம் முதலிய சுபமுகூர்த்த வேளைகளில் பசு வின் தரிசனம் புனிதமானதாகவும் தெய்வாம்சமுள்ளதா கவும் கருதப் பெறுவது. பசுவே வண்டியிழுக்கும் காளையை யும் வயல் உழுது வளம் செய்யும் காளையையும் ஈன்றுதரு வது. மாடு என்பது பசுவுக்கும் காளைக்கும் பொதுப் பெயர் எனவே மாட்டுப் பொங்கல் பசுவுக்கும் காளைக் கும் பொதுவானதாகும். மாட்டு வளத்தால் மனைகள் பொங்குக!

## கால்நடை வளர்ப்பும் பண்ணைப் பரிபாலனமும்

நம்மவர் வாழ்வில் கால்நடை வளர்ப்பாயினும் பண்ணைப் பரிபாலனமாயினும் அங்கெல்லாம் முதலிடம் வசிக்கும் பிராணி மாடு. மாடு சாதுவான பிராணி. மனிதவாழ்வில் வளங்கொழிக்கச் செய்யும் தெய்வப் பிராணி. மாட்டை நம்பி வாழும் வாழ்வு முற்காலத்தில் முல்லை நில வாழ்வு என நிலவியது. தாய்ப்பாலுக்கு அடுத்ததாக நம்மை வளர்ப்பது பசுப்பாலாதலாலும், நமக்குத் தேவையான உணவுத் தானியத்தை நாம் உழைத்துப் பெறுவதற்கு உதவியாயிருப்பது காளையாதலா லும் பசுவும் காளையும் வளர்ப்புப் பிராணிகளில் முதலி டம் பெறுவனவாயின. அவை முன்னைய தொகையிற் பார்க்க இன்னும் பெருகுக!

## மில்க்வைற் தொழிலதிபரின் முயற்சியும் பணியும்

அன்றொருநாள் அநுரதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட உணவு விவசாயத்தாபன- அயனமண்டல புற்றரை அபிவிருத்தித்திட்டத்தினரின் பாரிய பயிற்சி நெறியில் பங்குபற்றிய மில்க்வைற் தொழில திபரும் அண்ணு கமம் உரிமையாளர் இணுவில் ச.பொ. நட ராசா அவர்களும் இத்தகைய பயிற்சிநெறியொன்றை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு விரும்பினர்கள். அவர்களுக்கு உதவியாகக் கால்நடைப் பகுதி செ. சிவ சுப்பிரமணியம் பெரிதும் உடலுழைப்புத்தந்தார்.

## உணவு விவசாயத்துறை நிபுணர்

உணவு விவசாயத் துறையில் பெரும் பணி புரிந்து வந்த கலாநிதி P. A. சடோகர் உலகப் புகழ் பெற்ற நிபுணர். அவர் இலங்கையில் மலை நாட்டிலும், சிலாபம், புத்தளம், குருநாகல் பிரதேசத்திலும் 1976 ஆம் ஆண்டு முதல் கால்நடைத் தீவனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவந்தார்.

அவரின் கால்நடைத் தீவனங்களைப் பயிராக்குதல், பெருக்குதல், அவற்றைப் பலவிதமாகப் பாதுகாத்துப் பயன்படுத்துதல், குழிப்பாதுகாப்பு முறையை அறிமுகப் படுத்துதல், அவரையினத்துத் தழைகளையும் மரவினத் துத் தழைகளையும் பயிராக்கிப் பயன்காணுதல், பாற் பண்ணையாளருக்கும், பாற்சபையினருக்கும் பலவிதமாக ஆலோசனைகள் கூறுதல், பயிற்சியளித்தல், நெறிப்படுத்து தல் முதலிய துறைகளில் முக்கிய பங்களிப்புச் சேவை பரந்து விரிந்த உலகின் உணவு விவசாய நிறுவனம் என்னும் F. A. O. தாபனத்தின் நன்கொடையாகும்.

## பெருவிழாவாக நடைபெற்ற பயிற்சிநெறி

1. பேராதனைப் பல்கலைக்கழகம்
2. விவசாயத் திணைக்களம்
3. கால்நடையபிவிருத்தி
4. திருநெல்வேலிப் பெண்கள் விவசாயப் பாடசாலை
5. அண்ணு கமம் இணுவில்
6. மில்க்வைற் தொழிலகம்

யாழ்ப்பாணத்தில் ஒரு பயிற்சிநெறியாகப் பெரு விழா வமைப்பில் நடத்துவதற்கு முன்வந்த F. A. O. நிபுணர் கலாநிதி சடோகர் அவர்களுக்கு மேலே சொன்ன நிறு வனங்களும் தனியார் பலரும் பக்கபலமாக முன்வந்து உடனின்று உதவி செய்தனர்.

உலக உணவுத்தாபனத்தின் உஷ்ணவலய மேய்ச்சல் தரை அபிவிருத்திப் பகுதியினரும், கால்நடையபிவிருத் தித் திணைக்களத்தாரும், மிருகவைத்திய கலாநிதிகளும், அநுரதபுரத்து கால்நடைப் பண்ணை முகாமையாளர் செ. சிவசுப்பிரமணியம் அவர்களும், திரு. எதிர்வீரசிங்கம் அவர்களும், திருநெல்வேலி பெண்கள் விவசாயப் பாட சாலை அதிபர் திருவாட்டி சீவரத்தினம் அவர்களும், அவர் தம் மாணுக்கியரும் பெருமளவில் பணிபுரிந்து ஒத்துழைப்பு நல்கினர்கள்.

முன்னர் அநுரதபுரத்தில் நடைபெற்ற ஐந்தாம் விழாவைவிட யாழ்ப்பாணத்தில் நடபெற்ற ஆறும் விழா வெகு கோலாகலமாகவும் நிகழ்ச்சிகள் நிரம்பியதாகவும், பயன் பெற்றோர் தொகை அதிகமாகவும் அமைந்தன. பயிற்சி நெறியிற் பங்குபற்ற விரும்பியவர்களுக்கான விண்ணப்பங்கள் நிரை நிரையாக ஒருவார காலத்திற்கு முன்னதாகவே வந்து குவிந்தன.

பயிற்சி நெறிக்கு வருவோர்க்கெல்லாம் உணவும் உபசரிப்பும் கொடுப்பதற்கு பெண்கள் விவசாயப் பாட சாலை அதிபர் திருவாட்டி சீவரத்தினம் அவர்களும் மாணுக்கியரும் அரும்பணி புரிந்தனர்.

★ மனப் பண்பு விருப்பு வெறுப்புக்களை உண்டாக்குகிறது ★

# சிங்க நோக்கு

விலங்குகளுக்கு அரசன் எனப்படும் சிங்கத்தை நம்மவர் அரிமா என வழங்குவர். அரசனுக்குரிய ஆசனத்தை வலிமை நோக்கி அரியணை என்பர். அதனைச் சிங்காசனம் எனவும் வழங்குவர். சிங்கத்தின் நல்லியல்புகளையெல்லாம் நாமிங்குக் கூறமுற்படவில்லை. சிங்கத்தின் இயல்பான குணங்களிலொன்று சிங்கநோக்கு எனப் பெயர் பெற்று வழங்குகின்றது.

சிங்கம் தான் போன தூரத்தையும் போகவேண்டிய தூரத்தையும் அறிவதற்காக இடையில் வந்தவழியைத் திரும்பிப் பார்க்கும் என்பர். திரும்பிப்பார்த்தல் பண்பாட்டில் பெருநெறி. நாம் எப்படியிருந்தோம், இன்று இறைவனருளால் இப்படி வாழ்கின்றோம் என்று பூர்வ காலத்து நிகழ்ச்சிகளை ஒரு கணம் நினைத்தால், நம்மைப் போல மற்றையோரும் வாழ்வதற்குக் கைதூக்கிவிடும் பரோபகார சிந்தனை உண்டாகக் கூடும். அது நிற்க.

நாம் வந்த வழியைத் திருப்பிப் பார்க்கும் போது இதுவரை ஆறுண்டுக் காலத்தில் எழுபத்திரண்டு இதழ்களை வெளியிட்டுள்ளோம். இடையிடை சிறப்பிதழ்களை வெளியிட்டுப் பெரும் புகழ், பாராட்டுப் பெற்றுள்ளோம்.

மில்க்வைற் செய்தி விளம்பரச் செய்தியென நீங்கள் கருதுவதானால், பன்னிரண்டு பக்கங்களில் ஒருபக்கத்தில் எங்கேனும் ஒரு மூலையில் ஒரு விளம்பரம் இருக்கக் காணலாம். காகிதம் உச்சவிலையில் விற்கும் காலத்தில் இப்படியொரு செய்தியை உருவாக்கி நீங்கள் உபயோகித்த சவர்க்கார மேலுறைகளுக்குப் பரிசாகவோ இலவசமாகவோ தொழிலதிபர் உபகரிக்கிறார் என்பதை ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள். சாதாரணமாகச் சவுக்கார மேலுறைகளைக் கிணற்றடியில் கசக்கி எறிந்துவிடாமல் அவற்றைக் காசுத்தாள்கள் போலப் பாவனை செய்து பாருங்கள். அவற்றைப் பத்திரப்படுத்திக் காலத்தோறும் தொழிலகத்திற்கு அனுப்பி உங்களுக்குத் தேவையான வெளியீடுகளையோ பரிசுப் பொருள்களையோ பெற்றுக் கொள்ளுங்கள்.

தமிழ் மொழி மூலம் கல்விபயிலும் எங்கள் செல்வக் குழந்தைகளான மாணக்கர் மாணக்கியரின் மொழி வளமும் அறிவு வளமும் வளரவேண்டுமென உளங்கொண்டு இச் செய்தியைக் காலந்தவறாமல் வெளியிடுவதற்கு என்றும் ஊக்கமளித்து வரும் மில்க்வைற் தொழிலதிபரின் உளப்பண்பாடு பெரிது.

சென்ற தை மாதத்தில் தமிழ் நாட்டில் மதுரை மாநகரில் கோலாகலமாக நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவாக நாம் வெளியிட்ட சிறப்புச் செய்தியிதழுக்கு அங்கும் இங்கும் பெரிய பாராட்டுக் கிடைத்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்குச் சென்று பன்முகமாகப் பணிபுரிந்த ஈழநாட்டவர் தம் பெருமையெல்லாம் பேசும் செய்தியாக வெளி வந்ததோடு, தமிழ் நாட்டிலேயே காலந்தோறும் தோன்றி நின்று நிலவிப் பணி செய்த சங்கங்கள் சபைகளின் வரலாற்றையும் செய்தி விவரமாகக் கூறிற்று என்பதை உளங்கொண்ட பெரியார்கள் பலர் ''கொல்ல தெருவில் ஊசிவித்தீர்களே'' என்று முன்னிலையில் பாராட்டினர்.

அங்ஙனமே சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தார் சைவமும் தமிழும் சமூகப் பணியும் செய்துவருகின்ற சிறப்பையும், அவர்கள்தம் விழாக்களில் எழுபத்தைந்து ஆண்டுக் காலத்தில் எங்கள் ஈழநாட்டுச் சைவப் பெரியார்கள் எவ்வாறெல்லாம் ஒத்துதவியும் பணியும் செய்து ஊக்குவித்தார்கள் என்றும், முதலாண்டு விழா, வெள்ளி விழா, பொன்விழா என்பனவின் சிறப்பையெல்லாம் விஞ்சிப் பவள விழாவான எழுபத்தைந்தாம் ஆண்டு விழா ஈழநாட்டின்சிரம்போன்ற யாழ்ப்பாணத்தின் நெற்றி போன்ற தெல்லிப்பழை என்னும் மூதூரில் துர்க்கையம்மன் திருக்கோயில் முன்றலில் மூன்று நாட்கள் சிறப்புற நிகழ்ந்ததென்றும் விபரமாகச் செய்தியில் வெளியிட்டு மகிழ்வித்தோம்.

சாதியிலும் சமயமே பெரிது என்று அறிஞர்கள் கூறுவர். எங்கள் சமயம் பெரிது. நாம் பிறந்து வளர்ந்த காலத்தில் அப்பனே, இறைவா, கடவுளே என்றெல்லாம் கூவியழைத்துக் கும்பிட்டுக் குறை தீர்க்கப்பெற்ற சமயம் நம் சமயம். சரித்திர காலத்துக்கு முற்பட்ட இதிகாச காலத்திற்கும் முற்பட்டது எம் சமயம். அதன் பெருமையையும் அருமையையும் ஐரோப்பியர், அமெரிக்கர் நன்கறிந்து, உல்லாசப்பிரயாணத்தின்போதுகூட உளங் கொண்டு போகின்றார்கள் என்றால் இதைவிட நமக்குப் பெருமையும் மேன்மையும் வேறுண்டோ.

---

சிறுவர் பகுதி:

# உழவர் வாழ்க



(அழ. வள்ளியப்பா)

(அன்பர் வள்ளியப்பா அவர்கள் எமது சுற்றுடல் கல்வியில் பிரசுரிப்பதற்கு மனமுவந்து அநுமதிதந்த பாடல்களில் இவையும் அடங்கும் எனவே இவற்றை இங்கே பிரசுரிக்கிறோம் - நன்றி.)

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே.

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்.

பாடு பட்டு உழுபவர்
பலனுங் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே.

---

★ ஆகமம் என்றாலே சமயம் என்று பொருள் தருகிறது ★

## யாழ்ப்பாணத்து முருங்கை

யாழ்ப்பாணத்து மாம்பழத்திற்குத் தென்னிலங்கையில் பெருமதிப்பு. யாழ்ப்பாணத்து முருங்கைக்காய்க்கு அதனிலும் மதிப்பு. யாழ்ப்பாணத்து முருங்கைக்குத் தமிழ் நாட்டில் தனிமதிப்பு. இங்கிருந்து தமிழ்நாட்டுக்கு யாரோ எடுத்துச் சென்று அதனை அங்கே புகழ்பெறச் செய்தார். அதன் சுவையினை அங்குள்ளவர்கள் வெகுவாக விரும்புவர்.

ஆறுமுகநாவலர் ஒருசமயம் சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்து முருங்கைக்காயின் குழம்பில் இரண்டுவித சுவைகள் உண்டாகுமாறு தமது தவசிப்பிள்ளையைக் கொண்டு சமைப்பித்துத் தமிழ் நாட்டவருக்குச் சுவையூட்டினர் என்ப. அது நறுக்கிய முருங்கைக்காய்த் துண்டுகளின் ஒருபக்கம் எண்ணெய்யில் படும்படி சரித்துவைத்துப் பொரித்துவைத்த குழம்பாகும். பொரிக்கப்பட்ட பாகம் ஒரு சுவையும் மறுபக்கம் ஒரு சுவையுமாக இரு சுவை உண்டாயின என்பது கதை.

முருங்கையினத்தில் தென்மராட்சிப் பகுதியில் சிறந்த இனம் நல்ல பயன் தருவதோடு நீளமான களிநிறைந்த காய்களையும் தருகிறது. நல்ல முருங்கைத் தடியை நட்டு இரண்டு ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான காய்களைத் தருகிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் காய்களின் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. செம்முருங்கை என்னும் இனம் ஆண்டு முழுவதும் காய்தருகிறது.

முருங்கை மலேசியா, பர்மா, இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் நல்ல பயன் தருவதாகும். இக்காலத்தில் நம்மவர் சிலர் நைஜீரியா முதலிய ஆபிரிக்க நாடுகளில் பொருளீட்டச் சென்றுறையும் வேளையில் முருங்கை மரத்தை ஆங்கெல்லாம் நாட்டி நல்ல பயன் பெற்று வருகின்றனர்கள்.

முருங்கை இலை, பூ, காய், பட்டை, பிசின், வேர் எனவுள்ள பகுதிகளெல்லாம் பயன்தர வளரும் மரமாகும். இதில் மாப்பொருள், புரதப்பொருள், தாதுப்பொருள், உயிர்ச்சத்து முதலிய உணவுச் சத்துக்கள்யாவும் உள்ளன. உயிர்ச்சத்து என்னும் விட்டாமினில் A, B என்னும் இரண்டு வகையும் போதியளவு உள்ளதோடு சிறப்பான இரும்புச் சத்தும் உண்டு.

### முருங்கையிலை

முருங்கையிலையில் உயிர்சத்து A இனம் நியையவுண்டு. இதனை நன்குணர்ந்த மூதாதையர் ஏழைகள் தவிட்டுடன் முருங்கையிலையை வேகவைத்து உண்டு சுகதேகிகளாய் வாழ்ந்தனர். முருங்கையிலையில் உள்ள சாறு நெய்கெட்டுப் போகாதிருப்பதற்காகவே, நெய்யுருக்குவோர் அதனை உருகிவரும் நெய்யில் அந்நாளில் தோய்த்து எடுத்தனர்.

முருங்கையிலையின் மற்றொரு மகத்தான குணம் மருத்துவத்துறையில் எல்லோரும் அறிந்ததொன்றாகும். முருங்கையிலையை மஞ்சள், மிளகு, உள்ளி, உப்பு முதலிய வற்றோடு சேர்த்து அரைத்து நாய்கடித்த இடத்தில் கட்டினல் நஞ்சு ஏருமல் தடுக்கும். முருங்கையிலை உணவு கொள்பவர்களுக்கு நோய்கள் வரா.

முருங்கையிலைக் காம்புடன் கருவேப்பிலைக் காம்பையும் அவித்துப் பருகுவதால் வயிற்றில் உண்டாகும் பூச்சிகளின் உபத்திரவம் நீங்கும்.

### பூவும் காயும்

முருங்கைப் பூவைப் பருப்புடன் வேகவைத்துண்பதால் உடல் வெப்பந் தணியும். கண்ணெரிச்சல் நீங்கும். முருங்கைப் பூவை மூலப்பொருளாகக் கொண்டு பலவித லேகியங்கள் செய்கிறார்கள். நூல் போன்ற முருங்கைப் பிஞ்சு பத்தியத்திற்கு மிகவும் நல்ல பொருளாகும். முதிர்ந்த முருங்கைக்காயின் வெண்மையான பகுதியும் விதையும் ஊறுகாய் தயாரிப்பதற்கு உகந்தவை. முருங்கை விதையை மெதுவாக வறுத்தும் உண்ணலாம் என்பர். அதனை வெயிலில் உலர்த்தி எண்ணெய் எடுக்கலாம் என்றும், அதில் உண்டாகும் எண்ணெய் கைக்கடிகாரம் முதலிய நுண்ணிய இயந்திரங்களுக்கு இயங்கும் தன்மையைக் கொடுக்கும் என்றும் அநுபவம் பெற்ற பொறியியலாளர் கூறுவர். முருங்கையெண்ணெய் நறுமணமுள்ளது. அன்றி வாதம், முடக்கு வாதம், சிறுபிள்ளை வாதம் முதலிய வற்றுக்குப் பூச்சு மருந்தாகவும் பயன்தருகிறது என்பது வைத்தியர் கண்ட அநுபவமாகும்.

### பட்டையும் பிசினும்

முருங்கைப் பட்டையை இடித்துச் சாறு பிழிந்து தைலங்கள் தயாரிக்கின்றார்கள். முருங்கைப் பட்டைச் சாற்றையும் குப்பைமேனியிலைச் சாற்றையும் நல்லெண்ணெயிற் கலந்து காய்ச்சிச் சொறி சிரங்கு முதலிய தோல் வருத்தங்களுக்கு மருந்து கண்டுள்ளார்கள்.

முருங்கை மரத்தில் வடியும் பிசினை நல்லெண்ணெயில் கலந்து காதுக்குத்துக்கு மருந்தாக்குவர். பிசினைப் பசுப் பாலிற் கலந்து கன்னத்துக்குப் பூசுவதால் தலைவலி நீரும் என்பர்.

### வேர்

முருங்கை வேர் மிகுந்த காரம் உள்ளது. இதனைத் தாளிதஞ் செய்வதற்கும் பயன்படுத்துவர். இதனை வைத்தியர்கள் பலவிதமாகப் பயன்படுத்துவர்.

## எதிலும் தீவிரமுள்ள திராவிடம்

காந்தியடிகளைத் தூக்கிவிட்டதிலும், விநோபாஜியை ஊக்கிவிட்டதிலும், சைவம் வைணவம் ஆகிய வைதிக சமயங்களை நிலைபெறச் செய்ததிலும் இறைவனுக்கு அழகிய பெரிய திருக்கோயில்களை அமைத்ததிலும், கல்விப்பணிக்காக ஆயிரக்கணக்கான பாடசாலைகளை நிறுவியதிலும், பலவித பயிர்களை விளைவித்துப் பஞ்சம் போக்கியதிலும், பல்வேறு தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்திப்பொருட்கள், உதிரிப்பாகங்களை உண்டாக்கியதிலும் தீவிரமாக உழைத்துவருபவர்கள் திராவிட நிலத்தவர்கள். தமிழ் நாட்டில் பழனிமலை முருகப் பெருமானின் திருவருளுக்கும் போகமுனிவரின் சித்துக்கும் பெயர்போனது. பழைய வள்ளல்களிலொருவனின் பெருமைக்கும் பெயர்பெற்ற பழனி விநோபாஜி அவர்களின் பூதான இயக்கத்திலும் தலையாய புகழ்பெற்றது. அங்கே 22-11-1957ல் நடைபெற்ற மாநாடு, பூதான இயக்கத்தைத் திசைதிருப்பி அதற்கு வேக கதியைக் கொடுத்தது. கிராமோதயத, கிராமராச்சிய இயக்கத்துக்குத் தமிழ்நாடே கதி என்று வடநாட்டுப் பெரியவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

★ இறைவனின் குரலே வேதங்களும் ஆகமங்களும் ★

# சென்ற வருடத்தின் பழுதிலாத்திறன்

மில்க்வைற் தொழிலகத்தின் சேவை மதிப்பீட்டில் 1981 ஆம் ஆண்டின் பழுதிலாத் திறன் சிந்தை நிறைவாயுள்ளது என்றே கூறவேண்டும். ஆயினும் குளங்களை ஆழமாக்கும் பணியில் அன்பர்கள், சேவை மனப்பான்மையுள்ளவர்கள், சிரமதானஞ் செய்வோர் போதியளவு ஊக்கமெடுக்கவில்லை என்பது, அவர்கள் மில்க்வைற் தொழிலகத்தில் மண்வெட்டிகள், தாச்சிச்சட்டிகள் இரவல் எடுக்காத அமைவில் புலனாகின்றது.

மில்க்வைற் தொழிலகத்தின் மற்றொரு பணியான மரம் நாட்டும் பணி, சென்ற வருடம் மகத்தானதாக நடைபெற்றது. வழக்கம்போலச் சாரணச் சிறுவர்களும், சனசமூக நிலையத்தார்களும், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களும் போதிய ஊக்கம் எடுத்துள்ளார்கள். பிரதேசமெங்கும் அவர்கள் பரவலாகப் பல வித மரங்களை நாட்டியுள்ளார்கள்.

மில்க்வைற் தொழிலகத்திற்கு வழக்கமான பல் வேறின மரக் கன்றுகளை நாற்று மேடைகளில் தயாரித்து விலையாகவும், இலவசமாகவும் தந்துபகரிக்கும் அன்பர்கள் சென்ற வருடத்தில் மேலதிகமாகவே உதவியுள்ளார்கள்.

மரம் நாட்டும் வைபவத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் மில்க்வைற் தொழிலகத்தில் பல்வேறின மரக்கன்றுகளைப் பெற்றுச் சென்றமை, தக்க இடத்தில் பிள்ளைகளைத் திருமணஞ் செய்து வைத்த பெற்றோர் பெறும் மகிழ்ச்சிபோல மனமகிழ்வை உண்டாக்கியது. இன்னும் நவராத்திரி நாள்களை மரம் நாட்டும் நாள்களாக நாம் கொண்டொழுகுவதற்கு வடமாநிலக் கல்விப் பணிப்பாளரும் பிரதம கல்வியதிகாரிகளும், வட்டாரக் கல்வியதிகாரிகளும் போதிய ஒத்துழைப்புத் தந்தமை மறக்கமுடியாத உதவியாகும்.

பனையபிவிருத்திப் பணியில் பல்வேறு சனசமூக நிலையங்களும் விளையாட்டுக் கழகங்களும் ஆயிரமாயிரமாகப் பனம் விதைகளைத் தந்து அவற்றின் உடன்பயன் பெற்றாற்போல் பந்து முதலிய உபகரணங்களைப் பெற்றார்கள்.

பனையபிவிருத்தியில் பன்னவேலை என்பது மாதரைப் பொறுத்தவரையில் ஓய்வு நேரத்தில் உற்பத்திப் பொருள்களைப் பெருக்குவதாய் அமைந்தது. ஓலை வார்வதற்குக் காம்புச் சத்தகங் கொண்டு கைகாய்க்கக் கிழித்தவர்கள் எல்லோரும் மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்து வரும் உருக்குயந்திரம் கொண்டு இலகுவில் ஓலை வாருகின்றார்கள். பன்னவேலைப் பயிற்சியில் கைதேர்ந்த திரு. இராசகுலசிங்கம் அவர்கள் மில்க்வைற் தொழிலதிபர் சொல்லும் இடமெல்லாஞ் சென்று வேலை பழக்குதல் பெரிய உதவியும் சேவையுமாயிற்று.

மில்க்வைற் தாபனத்திற்கு மட்டில்லாப் பெருமையும் பூரிப்பும் தந்த மற்றொரு பணி சமயப் பணியாகும். சைவசமயச் சிறுவர் சிறுமியர் எல்லோரும் கட்டாயமாகச் சிவதீட்சை பெற்றிருத்தல் வேண்டும் என்னும் பெரு நோக்கிற் பணிசெய்யப் புறப்பட்டபோது ''வாருங்கள்'' என்று அழைத்த இடங்களெல்லாம் எழுந்தருளித் தீட்சை செய்து வைத்த நல்லையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளின் பணியினை மறக்கமுடியாது. இன்னும் இப்பணியில் உளங்கொண்ட பல்வேறு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் பாடசாலையபிவிருத்திச் சபையினருக்கும் அவர்களுக்கு உதவியாக எழுந்தருளிய சைவக் குருமாருக்கும் நாம் கடமைப் பட்டுள்ளோம்.

முந்திய ஆண்டுகளைவிடச் சென்ற ஆண்டில் மேலதிகமாக ஆறுமுகநாவலர் ஐயாவின் நித்தியகரும விதியும், திருநீற்றுப்பதிகமும், திருநீற்றுப் பைகளும் சென்ற ஆண்டில் விநியோகிக்கப்பெற்றமை பெருமகிழ்ச்சிக்குரிய தாகும்.

பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அவர் தம் வரலாற்று நூலொன்று தயாராகும் வேலையில் முன்னோடியாக அவர்தம் அழகிய பெரிய படம் ஒன்று நல்ல காகிதத்தில் அச்சிட்டு வெளியிட்ட சேவையை எல்லோரும் பாராட்டுகின்றனர்.

எல்லாவற்றுக்கும் முடி சூட்டினாற்போல மில்க்வைற் தொழிலதிபரின் தென்னம்பிள்ளைகள் விநியோகம் அமைந்தது. நல்ல இனத்ததும் விரைவிற் காய்ப்பதும், அதிகம் காய்ப்பதுமான தென்னையினத்தில் 10,000 பிள்ளைகள் கொள்விலைக்குக் கொடுக்கப் பெற்றன. இன்னும் நல்ல இனத்துச் செவ்விளநீர்ப் பிள்ளைகள் கிடைத்தற்கரியன வாயிருந்தபோதிலும் 2000 பிள்ளைகளை அரிதிற்பெற்று விநியோகஞ் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளைக்கார அரசாங்க அதிபர்கள் வரலாற்றிலே டைக் என்னும் பிரபுவின் பணி பெரிது. கச்சேரியின் பழைய பூங்கா, கச்சேரியிலிருந்து போகும் வீதிகள், முத்திரைச் சந்தைவெளி எங்கெங்கே பார்க்கினும் பாரிய அளவில் வளர்ந்துள்ள மலைவேம்புகள் மகோகினி என்னும் பெயர் உள்ளவை. இவற்றை நாட்டிய டைக் யாழ்ப்பாணத்தாரைப் பெரிதும் விரும்பி உத்தியோக உயர்வு வேண்டாமென்று மறுத்து இங்கேயே 38 ஆண்டுகள் சேவை செய்தவர். அவரை நம்மவர் யாழ்ப்பாணத்து இராசா என அபிமானித்தனர்.

டைக் துரை அவர்களுக்குப் பின் எங்கெங்கும் மலைவேம்பு நாட்டிய பணி மில்க்வைற் தொழிலதிபரின் முயற்சியாயிருந்ததோடு 1981 ஆம் ஆண்டில் அது உச்சமாயிருந்தது என்பதில் உவகை பூக்கின்றது.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## புத்தாண்டுக்கு........

நாம் எல்லோமும் 1982ஆம் ஆண்டில் ஒரு வயது முதிர்ச்சியடைகிறோம். இதில் 365 நாட்கள் உள்ளன. இக்காலத்தில் நாம் ஏதாவது ஒரு நல்ல காரியத்திற்காக ஒரு சங்கற்பம் எடுத்துக்கொள்ளுதல் நன்று. எல்லா வகையிலும் பற்றுக்குறை உண்டாகி வருவதோடு விலைவாசிகள் ஏற்றம் பெறும் போது நாம் அவசியமில்லாத போக போக்கியங்களைக் குறைத்து வாழ்வோம் எனத் திட சங்கற்பம் பூண்போமாக. ''கொள்கையற்ற மனிதன் சுக்கானில்லாத கப்பல்'' என்று எமர்சன் கூறுமுன்னரே திருநாவுக்கரசுநாயனர் குறிக்கோளில்லாத வாழ்க்கை கேடு பயக்கும் என்று பாடியருளியுள்ளார்.

★ சின்னஞ்சிறு செலவுகளும் சிக்கனத்தைக் கெடுக்கும் ★

# BEST SIX DOCTORS

— SWAMI SIVANANDA —

The best Six doctors are **Sunshine, Water, Air, Diet, Exercise and rest.**

These doctors do not charge you even a pie. Their treatment is ever free. Get their treatment and be happy and healthy.

Sun-bath is a great tonic. It invigorates you. It gives you Vitamin D and removes all skin-diseases. Sunlight is a cheap and powerful disinfectant. It kills all germs. Expose your clothing in the sun daily. Pure air will purify your blood.

Pure water gives you good health. Wholesome, light, nutritious diet will make you healthy and strong. Never take stale things, over ripe and unripe fruits. Be regular in your exercises. Take rest.

## நன்றிக்கு மேல் நன்றி

மில்க்வைற் தொழிலதிபர் திருநெல்வேலியில் ஒழுங்கு செய்த விவசாய கால்நடை விழாவுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய பெரியார்கள் அதிகாரிகளுக்கு நன்றி. கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு சௌமிய தொண்டைமான் அவர்கள் நீண்டதொரு வாழ்த்துச் செய்தி அனுப்பி ஊக்கம் அளித்துள்ளார். இலங்கை – சர்வதேச அபிவிருத்திச் சங்க பாற்பண்ணை திட்ட இயக்குநர் மணி அவர்கள், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபைத் தலைவர் பொன்சேகா அவர்கள், கால்நடை அபிவிருத்தி, சுகாதாரம் சம்பந்தத் திணைக்கள இயக்குநர் கலாநிதி அபேரத்தின முதலானவர்களும் இன்னும் பலரும் வாழ்த்திய செய்திகள் மாசி மாத இதழில் மலரும். நன்றி.

## பால் பொங்குக

உலக நன்மை கருதும் இந்துப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களுள் ஒன்று, ''பால் பொங்கிற்ரு?'' என்று உற்ருர் உறவினர் நண்பர்களைத் தைப்பொங்கல் நாளையடுத்துக் கேட்டல். இந்துப் பண்பாட்டில் எழுபத்தைந்து வீதம் தமிழ்ப் பண்பாடு என்பதை இன்றும் பாண்டி நாட்டில் அறியலாம். தென்பாண்டி நாடே சிவலோகம் என்பது திருவாசகம். பாண்டி நாட்டில் தைப்பொங்கல், பட்டிப்பொங்கல் கழிந்தபின் பொதுமக்கள் ஒருவரையொருவர் காணும்நாள் காணும் பொங்கல் எனப் பெருவிழாவாக நடைபெறுகிறது. அதைச் சென்று நேரில் பார்த்தவர்களே அதன் முழுச்சிறப்பையும் அறிவர்.

பால் பொங்கிற்ரு என்னும் விசாரணையில் தான் எத்தனை விடயங்கள் அடங்கியுள்ளன. நல்ல விளைவு கிடைத்ததா? உற்ருர் உறவினர் சுகமா? என்பன போன்ற குசல விசாரணைகள் அதிலடங்கியுள்ளன.

பால் இனிப்பானது. எளிதில் சமிபாடாவது. இரத்தத்தோடு கலந்துவிடுவது பலத்தைத் தருவது. வீரியத்தை விருத்தி செய்வது. வாத பித்தங்களை நீக்குவது. சீதளத்தைத் தருவது. களைப்பு, மயக்கம், சுவாசகாசம், இரத்தக் குறைவு முதலிய பல நோய்களை நீக்குவது. சுகம் தருவது. பாலாடை மிகவும் நல்லது. பால் நுரை அமுதம் போன்றது.

# Great Sayings

1. The happiest people are those who don't want things they can't get.
2. When you point a finger of scorn at somebody-else, take a look at your hand. You will see that three fingers are pointing back at you.
3. Women are wiser than men. They know less and understand more.
4. He who cannot forgive others breaks the bridge over which he must pass himself for every man has need to be forgotten.


மில்க்வைற் உற்பத்திப் பொருட்களுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிகளுக்கே
உதவுகிறது.




முக்கிய கவனிப்பு

1982 ஆம் ஆண்டு கலண்டர் பெற விரும்புவோர் கீழ்க்காணும் விபரப்படியுள்ள

**மில்க்வைற் தயாரிப்புகளின்**

மேலுறைகளின் ஏதாவதொரு தொகுதியை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| நீல சோப் லேபல் | — | 25 |
| பார்சோப் லேபல் | — | 5 |
| சலவைப்பவுடர் லேபல் | — | 5 |
| நீம் சோப் லேபல் | — | 5 |
| மெடிக்கேற்றட் லேபல் | — | 5 |


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-1-82.